RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S13

# The Stratification of Chastity in the Ideology of Classical Literature

## செவ்விலக்கிய கருத்தியலில் கற்புநெறியின் அடுக்கமைவு

**E. Rajasekar** [a,*]

[a] Department of Tamil, Patrician College of Arts and Science, Chennai-600020, Tamil Nadu, India.

*Corresponding author Email: rajasekar@patriciancollege.ac.in

DOI: https://doi.org/10.54392/ijmrd223S13

Received: 13-04-2022; Revised: 06-07-2022; Accepted: 10-07-2022; Published: 19-08-2022

**Abstract:** This article conducts a conceptual study of chastity, using classical literature data as the scope of the study. This study seeks to know whether there are changes in the definition of chastity over time and whether the stratification of such changes has been reflected in the understandings of life. This review establishes proposed anti-feminist frameworks that link different assumptions about chastity to gender differences. Social contradictions have been created by aligning chastity with economic perspective and patriarchal thinking. Also, because there are a lot of chastity-related discourses that target only the female gender, the situation where the female gender has to accept its objectification occurs in classical literature. Constructing the state of infinite love as illicit and the state of finite love as chastity, the boundaries of illicit love and the boundaries of chastity are positioned as polar opposites. In particular, there has been an attempt to move the illicit love life towards the point of morality. But since morality has different definitions, it would be antithetical to measure another ideal by the same different yardstick. There have also been obscurantist discussions about the blackout discussions that have also occurred in the classical literature that warn men who drift from morality and punish women who do the same. This study advances the exploration of the cultural components that constitute chastity and uncovers its different hierarchies, thereby calling for some changes in the definitions of chastity.

**Keywords:** Classical Literature, Chastity, Gender Differences, Morality

**Language:** Tamil

## முன்னுரை

சங்கப்பாடல்களில் கற்பு குறித்த கோட்பாடுகள் திணைவழி மரபில் மிகுதியான அளவில் பேசுபொருளாகியுள்ளன. குறிப்பாக கற்பு என்கிற கருத்தியல் பெண்பாலினத்திற்காக வரையறுக்கப்பட்டது என்றும் அவர்களின் சுய ஒழுக்கம் குறித்த சொல்லாடல் என்றும் பொதுபுத்தியில் செவ்விலங்கியங்கள் விதைத்ததையும் மறுப்பதற்கில்லை. செவ்விலக்கிய மரபை ஆராயும் போது இயல்பான வாழ்வியல் பண்புகளோடு ஆணாத்திக்கத் தன்மையை மறைமுகமாக உட்செலுத்தியதற்கான சான்றுகள் பல்வேறு அடுக்கமைவுகளாகக் கிடைக்கின்றன. அதுமட்டுமல்லாமல் ஆண் பெண் உறவை மட்டுமே சுட்டும் தன்மையில் கற்பையும், ஒழுக்கத்தையும் கட்டமைத்து எழுதப்பட்டதற்கான சான்றுகளையும் செவ்விலக்கியங்களில் கண்டடைய முடிகிறது. இதன் அடிப்படையில் உற்றுநோக்கும் போது பல்வேறு கேள்விகள் எழுகின்றன.

- பண்பட்ட மரபைக் கொண்ட பண்டைய தமிழ்ச்சமூகம் உண்மையில் கற்புநெறியை எவ்வாறு வரையறுத்தது?
- பாலியல் ஒழுக்கத்தோடு கற்பு நெறியைப் பிணைத்ததற்கான காரணங்கள் என்னவாக இருக்கும்?
- கற்பை அதிக அளவில் பெண்ணுக்கு மட்டும் சுட்டுவதற்கான பின்னணி எந்த கருத்தியலிலிருந்து துவங்கியது?

- செவ்விலக்கியங்களில் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பெண்களை எவ்வாறெல்லாம் மதிப்பிட்டனர்? ஏன் மதிப்பிட்டனர்?

இக்கேள்விகளே கற்புநெறி குறித்த ஆய்வுக்களத்தில் பல புதிய கருதுகோள்களைத் துவக்கிவைக்கின்றன.

## கற்பெனும் வரைவியல்

கற்பு குறித்த கட்டமைப்புகளை இரண்டு வகையாகப் பகுத்தறியலாம். அவை

1. பண்டைய தமிழ்ச்சூழலைப் பின்புலமாகக் கொண்டு, அப்பனுவல்கள் எழுதப்பட்டக் காலகட்டத்தின் அடிப்படையில் கற்பின் பின்னணியை அணுகுவது
2. செவ்விலக்கியங்கள் முன்மொழியும் கற்புநெறியினை, நிகழ்கால கற்புக் கோட்பாட்டின் அடிப்படையோடு பொருத்தி ஆராய்வது.

## முதலாம் கோட்பாடு

செவ்விலக்கிய தரவுகளின் அடிப்படையில் கற்புநெறியை ஆராயும் போது, அதன் அடுக்கமைவு ஒவ்வொரு காலச்சூழலிலும் வெவ்வேறுவகையான வரையறைகளை முன்மொழிகின்றன. ”கற்பு என்பது மகளிர்க்கு மாந்தர் மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி அதுவும் மனத்தான் உணரக் கிடந்தது” என தொல்காப்பியத்திற்கு உரைவளம் எழுதும் போது இளம்பூரணார் குறிப்பிடுகிறார். களவு நிலையின் முதிர்ச்சியடைந்து இல்லற வாழ்வை மேற்கொள்வதே கற்பு வாழ்க்கை என்கிறது சங்க இலக்கியம். அகவாழ்வின் கற்பு நெறியை ஒழுக்கம், உண்மை, வழுவாமை, அழகு, என்கிற பொருண்மையில் தொல்காப்பியம் இயம்புகிறது. பத்தினிப்பெண்டிர் குறித்த குறிப்புகள் மணிமேகலையில் காணமுடிகிறது (Swaminatha Iyer, 1974). பரத்தமை தொழிலைத் தீத்தொழில் என்று கூறும் மணிமேகலை கற்பொழுக்கம் மீறுதலையே அடிப்படைவாதமாய் பதிவுசெய்கிறது. தலைவி நீராட சென்ற இடத்தில் ஆடவனைக் கண்டதாய் தோழியிடம் தலைவி கூற, தோழி செவிலியிடம் கூற, செவிலி நற்றாயிடம் கூற, நற்றாய் தனையரிடம் கூற இத்தனை கூறுதலுக்கு பின்னர் நடந்தவற்றை தோழி தலைவியிடம் கூற கற்பு வாழ்வைத் தொடங்குகிறாள். தலைவி கற்பு வாழ்வை மேற்கொள்ளவேண்டுமெனில் அதன் படிநிலைகள் இவைதான் என முன்மொழிகிறது (Swaminatha Iyer, 1974). கற்பு வாழ்வை கைவிடுபவர்கள் துன்பத்திற்கு ஆட்படுவார்கள் (Swaminatha Iyer, 1974). இவ்வாறு கற்பு, கற்பு மீறல், ஒழுக்கம், களவு வாழ்க்கை, என பல்வேறு வழக்காறுகளால் பழந்தமிழர் வாழ்வு கட்டமைக்கப்பட்டுள்ளதைச் செவ்விலக்கியங்களில் அறிய முடிகிறது.

## மாறுபட்ட கற்பிதங்கள்

செவ்விலக்கியங்களில் கற்பு குறித்த சிந்தனைகள் வெவேறுவகையான கற்பிதங்களை முன்மொழிகின்றன.

“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின்”. (Parimelalhagar, 2002)

கற்பு எனும் உறுதிப்பாடுடைய பெண்மையினும் சிறந்த செல்வம் வேறில்லை என்கிறது வள்ளுவம்.

தாயின் குற்றமில்லா கற்பு நெறியைச் சுட்ட, கற்பு என்கிற சொல்லையும் கடந்து மாசு இல் கற்பு என்கிறது அகநானூறு.

“அகவன்முலை அரும்பிய சுணங்கின்

மாசு இல் கற்பின் புதல்வன் தாய்” (Swaminatha Iyer, 1974)

தலைவியின் கற்பைக் காக்கும் பொருட்டு தலைவனின் பிரிவால் தலைவி நெறிபிறழாமல் இருக்க தோழி இவ்வாறு கூறுகிறாள்.

“செந்நெலஞ் செறுவிற் கதிர்கொண்டு கள்வன்

தண்ணக மண்ணளைச் செல்லும் ஊரற்கு

எல்வளை நெகிழச் சாஅ அய்

அல்ல ஒழப்ப தெவன்கொ லன்னாய்” (Swaminatha Iyer, 1974)

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பிவந்து தலைவியைப் புகழ்ந்துரைப்பதாகக் கூறும் போது,

“நாணொடு மிடைந்த கற்பின் வாள்நுதல்

அம்தீம் கிளவிக் குறுமகள்” (Swaminatha Iyer, 1974)

என்கிறார். கற்பு என்கிற கருத்தியலைப் பெண்ணின் மாண்புகள் இவைதான் என்று கட்டமைக்கப்பட்ட பல்வேறு சொற்களோடு ஒப்பிடுகின்ற தன்மையையும் தமிழ்மரபில் காணலாம். சான்றாக ‘பெண்ணுக்கு நாணம் சிறந்தது எனினும் அது எவற்றை விட சிறந்தது என்றால் உயிரைவிடவும் சிறந்தது என்கிறது தொல்காப்பியம். மனித வாழ்வில் உயிரைவிடவும் உயர்ந்த ஒன்று இருக்கமுடியுமா? என்கிற கேள்வியை முன்வைத்து, இக்கூற்றை அணுகினால், உயிரைவிடவும் உயர்ந்த ஒன்று இருக்கிறது. அத்தகைய உயர்ந்த ஒன்றின் பெயர்தான் கற்பு என்கிறார் தொல்காப்பியர்.

“உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்

செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று” (Subramaniyan, 2010)

இவ்வாறான சான்றுகளின் அடிப்படையில் கற்புநெறியை நோக்கும் போது செவ்விலக்கியங்கள் பெண்பாலினத்தை அடிமையின் வடிவங்களாக பல இடங்களில் சித்தரித்துள்ளதை அறியமுடிகிறது. ஆனால் இப்பனுவல்கள் எழுதப்பட்ட காலத்தோடு ஒப்பிட்டு நோக்குகையில், பெண்பாலினத்தை உயர்வான கண்ணோட்டத்திலும், புகழும் பிம்பங்களோடும் கொண்டாடப்பட்டுள்ளதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அத்தகைய கொண்டாட்டம் முழுமையான சுதந்திர உணர்வை அப்பெண்ணிற்கு வழங்கியிருக்குமா? என்பது ஐயப்பாடுடையது. இப்பெண் மிகச்சிறந்த அடிமை என்கிற கூற்றை எத்தகைய கண்ணோட்டத்துடன் ஒப்பிட இயலும். கற்பே சிறந்த செல்வம் என்பதும், உயிரைவிடவும் சிறந்தது கற்பு என்பதும் பெண்பாலுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய கற்பிதங்களாய் கட்டமைக்கப்பட்டுள்ளதை மேற்கண்ட கூற்றின் வழி உறுதிசெய்யலாம்.

## இரண்டாம் கோட்பாடு

அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருளையும் வாழ்வின் உறுதிப் பொருளாக வகுத்துக்கொண்ட பழந்தமிழர்கள், கற்புநெறி என்கிற கோட்பாடானது, ஒவ்வொரு காலகட்டத்திற்கும் மாறக்கூடியது என்பதனை அறியாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என அகத்திணையை ஏழாகப் பிரித்து வாழும் அளவுக்கு பகுத்தறிவில் முதிர்ந்த சமூகம் தமிழ்ச்சமூகம். இதன் அடிப்படையில் நோக்கும் போது கற்பு என்பது பாலியல் சார்ந்த கோட்பாடு என்பதையும் கடந்து, கற்பு என்கிற சொல் உணர்த்தும் வேறொரு சித்திரத்தையும் கண்டடைய வேண்டியிருக்கிறது. அவ்வகையில் கற்பு என்கிற சொல் குறித்து ஆராயவேண்டியுள்ளது. “கற்பு என்ற வார்த்தையைப் பகுபதமாக்கிப் பார்ப்போமானால் கல் என்பதிலிருந்து வந்ததாகவும், அதாவது படி - படிப்பு என்பது போல் கல் - கற்பு என்கிற இலக்கணம் சொல்லப்பட்டு வருகிறது. அன்றியும் கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்கிற வாக்கியப்படி பார்த்தால் கற்பு என்பது சொல் தவறாமை, அதாவது நாணயம், சத்தியம், ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் என்கின்றதான கருத்துகள் கொண்டதாக இருக்கிறது என்கிறார் (Thanthai Periyar, 2021). ஆனால் இவற்றையே பகாப்பதமாக பார்த்தால்” மகளிர் நிறை என்று காணப்படுகின்றது. இந்த இடத்தில் மகளிர் என்பது பெண்களையே குறிக்கும் பதமாக எப்படி ஏற்பட்டது என்பது விளங்கவில்லை. நிறை

என்கின்ற சொல்லுக்குப் பொருளைப் பார்த்தால் அறிவின்மை, உறுதிப்பாடு, கற்பு என்கின்ற பொருள்களே காணப்படுகின்றன. கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டது என்பதற்குத் தக்க ஆதாராம் கிடைக்காவிட்டாலும் அழிவில்லாதது, உறுதியுடையது என்கின்ற பொருள்களே காணக் கிடைக்கின்றன (Thanthai Periyar, 2021).”

இதன் அடிப்படையில் நோக்கும் போது அழிவில்லாதது என்கிற வார்த்தைக்கு கிரமமான கருத்துப் பார்க்கும் போது, இந்த இடத்தில் சுத்தம் அதாவது கெடாதது, மாசற்றது என்பதாகத்தான் கொள்ளலாம் என்கிறார் பெரியார். அதுமட்டுமல்லாமல் இந்த சுத்தம் என்கிற வார்த்தையும் கெடாதது என்கின்ற கருத்தில்தான் ஆங்கிலத்திலும் காணப்படுகிறது. அதாவது chastity என்கின்ற ஆங்கில வார்த்தைப்படி virginity என்பதே பொருள் ஆகும். அதை அந்தப்பொருளின்படி பார்த்தால் இது ஆணுக்கென்றோ, பெண்ணுக்கென்றோ சொல்லாமல் பொதுவாக மனித சமூகத்திற்கே -எவ்வித ஆண், பெண் புணர்ச்சி சம்பந்தமே சிறிதும் இல்லாத பரிசுத்தத் தன்மைக்கே உபயோகப்படுத்தி இருக்கிறது என்பதை காணலாம் (Thanthai Periyar, 2021). தந்தை பெரியாரின் இவ்வாய்வின் படி கற்பு என்பது ஆண், பெண் என்கிற பாலியல் சார்ந்த கட்டமைப்பு அல்ல என்பதும் அது இருவருக்கும் பொதுவானது என்பதும் உறுதியாகிறது (Thanthai Periyar, 2021).

இதனடிப்படையில் நோக்கும் போது கற்பு நெறியை பொதுவில் வைத்தால் இரு முடிவுகள் கிடைக்கின்றன.

- முதலாவது - கற்புநெறியை பெண் கடைபிடிக்க வேண்டுமெனில் அவற்றை ஆணும் கடைபிடிக்க வேண்டும்.
- இரண்டாவது- ஆணுக்கு கற்பு நெறி என்பது அவசியமில்லையெனில் அதே கோட்பாட்டைப் பெண்ணுக்கும் பொருத்துவது.

எவ்வளவு பெண்ணடிமைத்தனத்தோடு செவ்விலக்கியங்கள் எழுதப்பட்டிருந்தாலும் மேற்கண்ட இவ்விரு கோட்பாடுகளையும் அதே செவ்விலக்கியங்களில் அறியமுடிகிறது என்பதே இவ்விலக்கியங்களின் செழுமையை உறுதிசெய்கிறது. சான்றாக

தலைவன் கற்பு வாழ்விலிருந்து வழுவி பரத்தமை பொருட்டுச் சென்றான். தலைவனின் இச்செயலை இடித்துரைக்கிறாள் தலைவி (Swaminatha Iyer, 1974) இதே போல் தலைவனின் பரத்தைமை ஒழுக்கத்தைச் தொல்காப்பியரும் சாடுகிறார் (Subramaniyan, 2010). ஆனால் பரத்தையின் அன்பை பெறும் தலைவனை, தலைவி இடித்துரைப்பதன் அடிப்படையில் பரத்தையின் ஒழுக்கத்தையும் தலைவி சாடுவதாக அமைந்தாலோ அல்லது அவ்வாறு கொண்டு கூட்டி பொருள் கொள்ள நேர்ந்தாலோ அக்கூற்று பெண்ணின் வழியே மீண்டும் பெண்ணினத்தைச் சாடுவதாக அமைகிறதே தவிர அது ஆணினத்தைக் கண்டிப்பதாகாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதே போல் தலைவன் தலைவியை கற்பில் சிறந்தவள் என்று புகழ்கிறான்.

“ஆன்ற கற்பின் சான்ற பெரியள்” (Swaminatha Iyer, 1974)

முல்லை சான்ற கற்பின்

மெல்லியல் குறுமகள்” (Swaminatha Iyer, 1974)

இவ்வாறு தலைவன் தலைவியைக் கொண்டாடுவது அவளது கற்பின் அடிப்படையில் மட்டுமே. மாறாக அவளது அறிவாற்றலின் அடிப்படையில் அல்ல என்பதை இப்பனுவல்களிலிருந்து அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில் 55 இடங்களில் பெண்கள் திணைப்புனக் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

“சிறுகிளி முரணிய பெருங்குரல் ஏனல்

காவல்நீ என்றாளே” (Swaminatha Iyer, 1974)

என்கிறது நற்றிணை. மேலும் ஆகிய அடிகளின் வழியே இவற்றை உறுதிசெய்யலாம் (Swaminatha Iyer, 1974).

இத்தகைய ஆற்றல் மிக்கவளாய் பெண் இருந்தாலும் கற்பின் அடிப்படையில் மட்டுமே பெண்ணை அணுகுகின்ற போக்கு செவ்விலக்கியங்களில் காணப்படுகிறது.

ஆண், பெண் என்கிற இரு பாலின வேறு பண்பாடுகளுக்கிடையே ஏற்படும் மாறுபாடுகள் ஏன் நிகழ்கின்றதெனில் அது தர்க்கவியலான விவாதத்தை முன்மொழிகிறது. குறிப்பாக ஆண் ஆதிக்கம் பெண் ஆதிக்கம் என்கிற கட்டமைப்புகள் “எந்த ஒரு பண்பாட்டிலும் பாலின உறவுகளுக்கிடையில் கட்டப்பட்டுள்ள கருத்துருவாக்கம் எதிரிணை (Binary opposition) சார்ந்ததாகும் (Bhakthavatsala Bharathi, 2017). இக்கூற்றின் அடிப்படையில் இருவேறு துருவங்களாக ஆண், பெண் பார்க்கப்படுவதால் தான் வாழ்வியல் காட்டமைப்புகள் மாறுகின்றன என்று கருதலாம். ஆனால் அதுவே உறுதியானது அல்ல. பெண்மீது சுமத்தப்படுகின்ற எல்லாவிதமான அடிமைத்தனங்களுக்கும் அடிப்படைக் காரணம் வேறொன்றாக இருக்கிறது. இங்கு பெண்மீதான இன்னொரு செயல்பாட்டையும் கவனிக்க வேண்டும். கற்பில் சிறந்த ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால் இவள் கற்பில் சிறந்தவள் என்று எண்ணி அவளை இயல்பாய் விடாமல் அவளுக்கு கைம்மைக் கோலமிட்டு, அவளின் அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டுள்ளதை புறநானூறு உறுதிசெய்கிறது (Swaminatha Iyer, 1974). இவ்வாறு மாறுபட்ட கற்புக்கோட்பாடுகளால் செவ்விலக்கியங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## கற்புநெறியின் பண்பாட்டு அசைவுகள்

குடும்ப வாழ்வில் கற்பில் வழுவிய கணவனாக இருந்தாலும் அவனை மேலோட்டமாக கண்டிப்பவளாய் பெண் இருக்கிறாள் (Swaminatha Iyer, 1974). மேற்கண்ட முடிவுக்கு நேர் எதிராகவும் பெண்ணை செவ்விலக்கியம் வடிவமைத்துள்ளதையும் இங்கு காணலாம்.

“அணிற்பல அன்ன கொங்குமுதிர் முண்டகத்து

மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப

இம்மை மாறி மறுமை யாகினும்

நீயாகியர் என் கணவனை

யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே” (Swaminatha Iyer, 1974)

என தலைமகன் பரத்தையிற் பிரிந்து மீண்டுவந்த காலத்து முன்னிருந்த ஆற்றாமை நீங்கி அவனோடு அளவளாவி, நாம் பிறவிதோறும் அன்புடைய கணவனும் மனைவியுமென இருப்போமாக என்று கூறும் அளவுக்கு பெண்ணை செவ்விலக்கியங்கள் கட்டமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைவன் பரத்தையின் அன்பில் கலந்த நிலையிலும் தலைவி தன் கற்பு வாழ்வில் பழி நேராவண்ணம் தன்னைக் காத்து ஒழுகுதலின் நிலையைக் கைகோள் கற்பு என்று பெண்ணை உயர்த்தி கட்டமைத்துள்ளதை அறிய முடிகிறது (Swaminatha Iyer, 1974). ஆனால் தனக்கு நேரும் எல்லா துன்பங்களையும் இடையூறுகளையும் பிறர் அறியா வண்ணம் மனதிற்குள் புதைத்து வாழும் வாழ்வை மேற்கொள்ளும் தலைவியே கற்பு நெறி தவறாதவள் எனில் அவற்றை வெளிப்படுத்தி அறம் கேட்க முற்பட்டால், நெறி வழுவியவள் என்கிற உட்பொருளையும் செவ்விலக்கியங்கள் உணர்த்துவதை மறுப்பதற்கில்லை

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ (Swaminatha Iyer, 1974)

என்கிற உலக ஒற்றுமையை முன்வைத்த அதே பழந்தமிழர்கள் தான் போரில் தோற்ற வேந்தரது மகளிரின் கூந்தலைக் கொய்து கயிறாகத் திரித்தான் நன்னன் என்பதையும் கூறி பெருமைகொள்கிறது. அதுமட்டுமல்லாமல் போரில் தோற்று உயிர் நீத்த வீரங்களின் மனைவியை அடிமைகளாக்கி அவர்களின் அணிகலன்களைப் பறித்து, முடிமழித்து, இழிவு படுத்தியுள்ளனர் (புறம்.25) என்பதன் அடிப்படையில் நோக்கும்போது பாலியல் சார்ந்த இழிவுகளைச் சங்ககாலப் பெண்கள் அடைந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது (Swaminatha Iyer, 1974).

பெண்ணின் வாழ்வு என்பது கணவனுக்காக மட்டுமே படைக்கப்பட்டது என்கிற கட்டமைப்பில் கற்புநெறி என்கிற கோட்பாட்டினைப் பிணைக்கின்ற போக்கு செவ்விலக்கியங்களில் நிகழ்ந்துள்ளது. கணவன் இறந்தவுடன் அவள் கற்புடன் வாழ இயலாது என்கிற முடிவிலும் அவளுக்கு இனி யாரும் இல்லை என்கிற முடிவிலும் உடன்கட்டை நிகழ்ந்ததையும், அவர்களை ஆண்சமூகம் அச்சுறுத்தியுள்ளதையும் காணமுடிகிறது.

கற்புநெறி குறித்த பலதரப்பட்ட செவ்விலக்கிய கோட்பாடுகளில் பாலினம் சார்ந்த வரையறையரைகளை கட்டுடைக்கவேண்டியதாக உள்ளது. பொதுவாக கற்பெனப்படுவது சொல் திறம்பாமை என்கிற வரையறையை மட்டும் கருத்தில் கொண்டு அதன் அடிப்படையில் கவனிக்கும் போது களவு, கற்பு, ஆண், பெண், பரத்தை, கைம்பெண், மறுமணம், அல்லது புறம் சார்ந்த வாழ்வியல் கூறுகள், என எல்லா சொற்களுக்குள்ளும் பொருத்திப்பார்க்கக்கூடிய ஒற்றைக் கோட்பாடாய் 'சொல் திறம்பாமை' விளங்குகிறது. அகம் அல்லது புறம் இவ்விருவேறுபட்ட வாழ்வியலுக்கும் சில விதிமுறைகளை வகுக்கும் போது அத்தகைய கட்டமைப்பை இங்கு கற்பு எனலாம். அவ்வாறு உருவாக்கும் விதிகளில் இனக்குழுவிற்கேற்ப மாறுபாடுகளும் முரண்பாடுகளும் நிகழ வாய்ப்புண்டு. இதனடிப்படையில் நோக்கும் போது கற்புநெறி என்பது பாலியல் சார்ந்ததில்லை என்பதும் அது வகுத்துக்கொண்ட கோட்பாட்டுடன் தொடர்புடையது என்பதையும் இங்கு அறிதல்வேண்டும்

தமிழ்ப் பண்பாட்டின் முழுமைக்குள் ஆண் ஆதிக்கத்தன்மை செழித்தோங்கியமைக்கு அடிப்படைக்காரணம் உடல் சார்ந்த அடையாளங்கள் என்பதும் (தீட்டு, விளக்கு உள்ளிட்டவை) மட்டுமல்லாமல் அதன் வழியே நிகழும், இனப்பெருக்கம் சார்ந்த உறவும், அவ்வுறவின் மூலம் பாதுகாக்கப்படும் குடும்பம் என்கிற நிறுவனமும் ஆகும். கற்பு வாழ்வில் நிகழ்ந்த அதே இன்பத்தை அதே ஆடவனோடு களவு வாழ்வில் நிகழ்த்தினால் அது கற்பு நெறி மீறல் என்கிற வரையறைக்குள் வந்துவிடுகிறது. பின்னர் அவர்களே கற்பு வாழ்வுக்கு திரும்பும் போது தலைவியைத் தூற்றிய அதே சமூகம் அதே தலைவியை கொண்டாடுகிறது. இந்த முரண் தலைவிக்கு மட்டும்தானே தவிர தலைவனுக்கு அல்ல. தலைவன் எப்பொழுதும் கற்பு மீறல் என்கிற வரையறையைக் கொண்டு அழுத்தமாகக் கவனிக்கப்படுவதில்லை என்பதை இவ்வாய்வு சுட்டுகிறது. மேலும் கற்பு என்பது காலந்தோறும் மாறுபட்ட வரையறைகளைக் கொண்டது என்பதும் அதற்கென்று நிலையான சூத்திரங்கள் ஏதுமில்லை என்பதையும் இவ்வாய்வின் தரவுகள் முன்மொழிகின்றன.

## முடிவுரை

செவ்விலக்கியங்களில் கற்பு நெறி என்கிற சொல்குறித்தும் பல்வேறு நிலைகளில் அச்சொல் உணர்த்தும் பொருள் குறித்தும் நிகழ்த்திய இவ்வாய்வில் சங்கப்பாடல்களில் கற்பு நெறி என்னும் சொல் ஒவ்வொரு காலச்சூழலுக்கும் ஏற்ப வெவ்வேறு வகையான வரையறைகளை முன்மொழிந்துள்ளது. குறிப்பாக கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் என்கிற கருத்தியலும், களவு நிலையின் அடுத்தக்கூறான இல்லற வாழ்வை குறிப்பிடுகின்ற ஒன்றாகவும் கற்பு நெறி கட்டமைக்கப்பட்டுள்ளது. பரத்தை என்கிற சமூகத்தை இடித்துரைக்கும் அறப்பிறழ்வையும் நிகழ்த்தியதன் வாயிலாக பெண்ணையே பெண்ணுக்கெதிராக முன்னிறுத்தும் போக்கும் சங்க காலத்தில் நிகழ்ந்துள்ளது. அதே வேளையில் பரத்தையின் ஒழுக்க உயர்வை பரவலாகவே இவ்விலக்கிய பனுவல்களில் மறைக்கப்பட்டுள்ளதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். கற்புநெறி என்பது தனிமனித சுதந்திரத்தோடு தொடர்புடையது. குறிப்பாக இச்சுதந்திரம் பாலினவேறுபாடற்றவையாக அமைதல் வேண்டும். தான் பெண் என்பதால் யாருக்கும் அடிமையில்லை என்கிற உணர்வையும் தன் மன உணர்வுகளை அச்சமின்றி வெளிப்படுத்தவும், தன் வாழ்வின் முடிவுகளை தானே தீர்மானிக்கவும், மனதளவில் அடையும் உண்மையான விடுதலையே உண்மையான கற்புநெறி என முன்மொழியலாம்.

## References

Bhakthavatsala Bharathi, (2017) Panpattu Uraiyadal, Adaiyalam Veeliyedu, Tirchy, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Subramaniyan, S.V., (2010) Tholkappiyam Thelivurai, Manivasakar Pathippagam, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve., (1974) Pathupattu Nachinarkiniyar Uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Thanthai Periyar, (2021) Pen En Adimaiyanal, Valari Veeliyedu, Chennai, India.

**Funding**

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

E. Rajasekar, The Stratification of Chastity in the Ideology of Classical Literature, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 11-17. DOI: https://doi.org/10.54392/ijmrd223S13